நீதியில் நிலைத்திருந்து
உம் திருமுகம் நான் காண்பேன்
உயிர்த்தெழும் போது உம் சாயலால்
திருப்தியாவேன் -2

தேவனே நீர் என் தேவன்
அதிகாலமே தேடி வந்தேன் -2
நீரின்றி வரண்ட நிலம்போல்
ஏங்குகிறேன் தினம் உமக்காய

அல்லேலூயா ஓசன்னா -4 (நீதியில்)

ஜீவனை விட உம் அன்பு
அது எத்தனை நல்லுத
புகழ்ந்திடுமே என் உதடு
மகிழ்ந்திடுமே என் உள்ளம்
அல்லேலூயா ஓசன்னா -4 (நீதியில்)

உயிர்வாழும் நாட்களெல்லாம்
உம் நாமம் சொல்லித் துதிப்பேன்
அறுசுவை உண்பது போல
திருப்தியாகும் என் ஆன்மா
அல்லேலூயா ஓசன்னா -4 (நீதியில்)
படுக்கையில் உம்மை நினைப்பேன்
இராச்சாமத்தில் தியானம் செய்வேன்
துணையாளரே, உம் நிழலை
தொடர்ந்து, நடந்து வளர்வேன